No. of Printed Pages : 7

# 4225 (NS)

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# பகுதி - III – சிறப்புத் தமிழ்
# Part III – Advanced Language – TAMIL

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **மாற்று** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. உவகை என்ற மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய களமாக தொல்காப்பியர் கூறுவது :

(அ) பெருமை (ஆ) புதுமை

(இ) கொடை (ஈ) விளையாட்டு

2. சொற்றொடர் நிலை என்பது :

(அ) பரணி (ஆ) கலம்பகம் (இ) அந்தாதி (ஈ) தூது

3. தமிழின் செவ்வியல் தன்மைக்குச் சான்றாக விளங்குபவை :

(அ) இடைக்கால இலக்கியங்கள் (ஆ) பக்தி இலக்கியங்கள்

(இ) சங்க இலக்கியங்கள் (ஈ) இக்கால இலக்கியங்கள்

[ திருப்புக

https://www.tamilnaduboard.com

4. திருக்காவலூர்க் கலம்பகத்தை இயற்றியவர் :

(அ) குமரகுருபரர் (ஆ) புகழேந்திப் புலவர்

(இ) வீரமாமுனிவர் (ஈ) ஒட்டக்கூத்தர்

5. புறப்புண் நாணி வடக்கிருந் தோனே - இவ்வரிகள் இடம் பெறும் நூல் எது ?

(அ) நற்றிணை (ஆ) பதிற்றுப்பத்து

(இ) புறநானூறு (ஈ) பட்டினப்பாலை

6. வாழ்வியல் நிகழ்வுகளின் தொகுப்பு பார்வையாக உரைநடையில் எழுதப்படுவது :

(அ) சிறுகதை (ஆ) நாடகம் (இ) புதினம் (ஈ) கட்டுரை

7. **கூற்று :** பங்கஜத்துக்குத் தன் தங்கையின் பழக்கத்தைச் சகித்துக் கொள்ள முடியாமல் போய்விட்டது.

**காரணம் :** உரிமையுடன் பிறர் பொருளை எடுத்துச் செல்லும் தைரியம் அவளுக்குக் கிடையாது.

(அ) **கூற்று** சரி, **காரணம்** தவறு

(ஆ) **கூற்று காரணம்** இரண்டும் சரி **காரணம்** கூற்றுக்கான சரியான விளக்கமன்று

(இ) **கூற்று காரணம்** இரண்டும் சரி

(ஈ) **கூற்று காரணம்** இரண்டும் தவறு

8. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (1) | இலட்சிய வாதப் புதினம் | (i) | பஞ்சும் பசியும் |
| (2) | வரலாற்றுப் புதினம் | (ii) | அறுவடை |
| (3) | முற்போக்குப் புதினம் | (iii) | அகல் விளக்கு |
| (4) | வட்டார வழக்குப் புதினம் | (iv) | பொன்னியின் செல்வன் |

(அ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(ஆ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(இ) (1) - (i), (2) - (iv), (3) - (iii), (4) - (ii)

(ஈ) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

https://www.tamilnaduboard.com

9. ஒழுக்கம் இருக்குதே அதுதான் பொண்ணே பெரிசு. மரக்காத்தி ஒழுக்கம்தான் மரக்கானுக்குச் சொத்து - யார் கூற்று ?

(அ) பரீக்குட்டி (ஆ) பஞ்சமி
(இ) சக்கி (ஈ) கறுத்தம்மா

10. தியாக பூமி புதினத்தின் ஆசிரியர் யார் ?

(அ) கல்கி (ஆ) ராஜாஜி
(இ) இராமலிங்கனார் (ஈ) வடுவூர் துரைசாமி

11. இந்தியாவில் மூன்றாம் அரங்கை அறிமுகப்படுத்தியவர் :

(அ) விஜய் டெண்டுல்கர் (ஆ) கிரிஷ் கர்னாட்
(இ) பெர்டோல்ட் பிரெக்ட் (ஈ) பாதல் சர்கார்

12. 'நாடகவியல்' என்னும் நூலின் ஆசிரியர்__________.

(அ) சங்கரதாச சுவாமிகள் (ஆ) பரிதிமாற் கலைஞர்
(இ) பம்மல் சம்பந்தனார் (ஈ) மதுரகவி பாஸ்கரதாஸ்

13. 'தி ஜாஸ் சிங்கர்' என்பது :

(அ) உலகின் முதல் மௌனப்படம்
(ஆ) உலகின் முதல் பேசும்படம்
(இ) இந்தியாவின் முதல் மௌனப்படம்
(ஈ) இந்தியாவின் முதல் பேசும்படம்

14. 'அவன் **வந்து பார்த்துச்** சென்றான்' - இத்தொடரில் தடித்த எழுத்துகளில் இடம் பெற்றுள்ளவை.

(அ) பெயரெச்சங்கள் (ஆ) வினைமுற்றுகள்
(இ) முற்றெச்சங்கள் (ஈ) வினையெச்சங்கள்

15. சொற்கள் பொருளுணர்த்தும் தன்மை குறித்து ஆராய்வது :

(அ) தொடரியல் (ஆ) உருபனியல்
(இ) பொருண்மையியல் (ஈ) ஒலியனியல்

[ திருப்புக

https://www.tamilnaduboard.com

16. பின்வருவனவற்றுள் இலக்கியம் எனக் குறிப்பிட முடியாததைச் சுட்டுக :

(அ) கதை (ஆ) கவிதை

(இ) நாட்குறிப்பு (ஈ) நாட்டுப்புறப்பாடல்

17. தவறான இணையைச் சுட்டுக :

(அ) ர. அய்யாசாமி - பாலராமாயணம்

(ஆ) முத்துக்கூத்தன் - பண்ணை இல்லம்

(இ) வெ. நல்லதம்பி - எதிரொலி

(ஈ) கோ. சுவாமிநாதன் - இன்று ஒரு தகவல்

18. மார்கோனி தான் கண்டுபிடித்த கம்பியில்லாத தந்தி முறையினை இங்குப் பதிவு செய்து கொண்டார் :

(அ) இலண்டன் ராயல் குழுமம் (ஆ) இங்கிலாந்து அறிவியல் கழகம்

(இ) அமெரிக்க அறிவியல் கழகம் (ஈ) இந்திய அறிவியல் கழகம்

19. Keyword என்பதன் கலைச்சொல் :

(அ) சுட்டி (ஆ) குறிப்புச்சொல்

(இ) செல்மடல் (ஈ) செய்திப்பெட்டி

20. செல்பேசியை மோட்டோரோலா நிறுவனம் எந்த ஆண்டு உருவாக்கியது ?

(அ) 1970 (ஆ) 1973 (இ) 1975 (ஈ) 1978

## பகுதி - II

பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **24 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

21. பழந்தமிழர் வாணிகத்தை எவ்வாறு வகைப்படுத்தினர் ?

22. சூளாமணி பெயர்க்காரணம் தருக.

23. எழுத்தாளர் அசோகமித்ரன் என்னென்ன பிரிவுகளில் நூல்கள் எழுதியுள்ளார் ?

https://www.tamilnaduboard.com

24. இலட்சியவாதப் புதினங்கள் என்பவை யாவை ? எடுத்துக்காட்டு தருக.

25. அமலை என்னும் சொல்லின் வேர் மூலம் யாது ?

26. அச்சிடப்பெறாத இலக்கியங்கள் என்பன யாவை ? எடுத்துக்காட்டுகள் தருக.

27. மின்னணு ஊடகங்கள் என்று அழைக்கப்படுபவை எவை ?

28. சத்ய ஜித்ரேயின் முதல் மூன்று படங்கள் யாவை ?

29. நேயர் கடிதங்கள் - குறிப்பு வரைக.

30. மின்னூல் - வரையறுக்கவும்.

## பகுதி - III

பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். https://www.tamilnaduboard.com **7x3=21**

31. கலம்பகம் - சிறு குறிப்பு தருக.

32. அன்றாட செயல்களை எவ்வாறு தொடங்க வேண்டும் என ஆசாரக்கோவைப் பாடல் கூறுகிறது ?

33. கதைப்பின்னல் - வரையறுக்கவும்.

34. மண்ணோடு மனிதன் நிகழ்த்தும் போராட்டம் எத்தகையது என சா. கந்தசாமி விவரிக்கிறார் ?

35. பெண்ணிய அரங்க செயல்பாடுகள் குறித்து எழுதுக.

[ திருப்புக

https://www.tamilnaduboard.com

36. மூவகை அரங்குகள் குறித்து எழுதுக.

37. தொல்காப்பியர் குறிப்பிடும் பொருண்மைக் கோட்பாடு யாது ?

38. ஒப்பீட்டுமுறைத் திறனாய்வின் ஒப்பீட்டுத் தளங்கள் எவ்வாறு அமைய வேண்டும் ?

39. வானொலி மொழிநடை குறித்து எழுதுக.

40. செயலி - விளக்குக.

## பகுதி - IV

பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

41. (அ) தமிழ்க் கவிதையின் போக்குகள் குறித்து விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) இரட்சகர் எனப் போற்றப்படுபவர் யார் ? இரட்சணிய யாத்திரிக வழிநின்று எழுதுக.

42. (அ) முதலாளிக்கு ஆதரவாக இருந்த ராகினி தொழிலாளர்களுக்கு ஆதரவாக மாறிய விதத்தினை விளக்குக.

**அல்லது**

(ஆ) வாழ்வின் சிறுசிறு பிரச்சனைகளை நேர்மையாக எதிர்கொள்ளும் மனப்பாங்கே சிறந்தது - இக்கூற்றைப் பங்கஜம் கதாபாத்திரத்தின் வழி ஆராய்க.

43. (அ) புதினங்களில் நவீனம் - தற்காலம் குறித்து விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) தகுதி வழக்கில் ஏற்படும் சொற்பொருள் மாற்றம் குறித்து எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

https://www.tamilnaduboard.com

**44.** (அ) இன்றைய காட்சி ஊடகங்களில் திரைப்படம் பெறும் இடம் குறித்து நும் கருத்தைக் கூறுக.

**அல்லது**

(ஆ) நும் கல்வி வளர்ச்சிக்கு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எங்ஙனம் துணை புரிகிறது என்பதை விளக்குக.

**45.** (அ) திரைப்படத் தயாரிப்பில் கலைநுட்பங்கள் எவ்வாறு முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதை நிறுவுக.

**அல்லது**

(ஆ) திறனாய்வு அணுகுமுறைகளுள் எவையேனும் இரண்டைப் பற்றி விரிவாக எழுதுக.

**46.** (அ) வானொலி மற்றும் தொலைக்காட்சியின் பொது அமைப்புக் குறித்து விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும் புத்தகக் கண்காட்சியின் தொடக்க விழாவிற்கு நிகழ்ச்சித் தொகுப்புரை எழுதுக.

**47.** (அ) செல்பேசியில் மென்பொருளின் பங்கு குறித்து விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) ஏதேனும் மூன்று மொழிப் பயன்பாட்டுக் கருவிகள் குறித்து விளக்குக.

- o O o -

https://www.tamilnaduboard.com